# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1789 - 2012 දෙසැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2012.12.14**

*1789 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 170 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


***கவனிக்க.-*** (i) *அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

***கவனிக்க.-*** (i) *இவ்வர்த்தமானியின் பகுதி* V *இல் 2009 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (ஒற்றோபர்-திசெம்பர்) புத்தகப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகிறது.*

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

## *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, சனவரி மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***பி. கே. எஸ். ரவீந்திர,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யுன் மாதம் 23 ஆந் திகதி.*

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண கொழும்பில் நடைபெறுகின்ற (குடியியல் நீதிமன்ற அதிகாரத்தை அமுல்படுத்துகின்ற) மேல் நீதிமன்றம்

கொழும்பு 04, மெல்பன் அவெனியூ, 27 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பெல்வத்த ஷுகர் இன்டஸ்ட்ரிஸ் பீஎல்சீ கம்பனி ஒடுக்குவதற்கு உத்தேச கம்பனி தொடர்பான விடயத்தில் ;

வழக்கு இல. : HC/ CIVIL/ 46/2012/Co.

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின்கீழ் நீதிமன்றத்தால் ஒடுக்குவதற்கான கோரிக்கை பற்றிய விடயத்தில்;

எலயிட் கொமர்ஷல் பேர்ட்டிலயிசர்ஸ் (பிரைவட்) லிமிட்டெட், இல. 152, காலி வீதி, கொழும்பு 04.

............... மனுதாரர்

மேல் மாகாணம், கொழும்பில் நடைபெறுகின்ற குடியியல் அதிகாரத்தை அமுல்படுத்துகின்ற மேல் நீதிமன்றத்தால் மேற்குறித்த கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று பேலியகொட நவநுகே வீதி, 44/ 1, ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள அகஸ்டார் பேர்ட்டிலயிசர்ஸ் பீஎல்சீயினால் அந்நீதிமன்றத்திற்கு 2012, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது. அந்த மனுவானது 2013, பெப்புருவரி 5 ஆந் திகதி நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்கு கட்டளையிடப்பட்டுள்ளது. அந்த மனுவின் மீதான கட்டளையொன்று ஆக்கப்பட்டது தொடர்பில் இணக்கம் அல்லது எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எவரேனும் கடன் தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு நிமித்தத்திற்காக வழக்கு விசாரணை நடைபெறும்போது தானாக அல்லது தமது பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும். மனுவின் பிரதியொன்று தேவைப்படுகின்ற எவரேனும் கடன் தருநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு அதற்காக விதிக்கப்படுகின்ற கட்டளையொன்றைச் செலுத்திய பின்னர் கீழே கையொப்பமிடுபவரால் வழங்கப்படும் :-

போல் ரத்நாயக அசோஸியேட்ஸ்,
சட்டத்தரணிகள் பிரசித்த நொத்தாரிசுகள்,
சட்ட ஆலோசகர்கள்,
இல. 59, கிரெகரிஸ் வீதி,
கொழும்பு 07.

**குறிப்பு.-** அந்த மனுவானது விசாரணை செய்யும்போது தோற்றுவதற்கு எண்ணுகின்ற ஆளொருவர் மேற்குறிப்பிட்ட போல் ரத்நாயக அசோஸியேட்ஸ் சட்டத்தரணிகள் கம்பனிக்கு தான் அவ்வாறு எண்ணுகின்றதென்பதை எழுத்திலான அறிவித்தலொன்றை கையளித்தல் அல்லது அஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அவ்வறிவித்தலை அவரின் பெயர் மற்றும் முகவரியையும் அல்லது வியாபார நிறுவனமொன்றாயின் வியாபார நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியையும் குறிப்பிடுதல் வேண்டும். அவரால் அல்லது வியாபார நிறுவனத்தால் அல்லது அவரின் அல்லது அவர்களின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியால் (இருப்பின்) கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன் மேற்குறித்த நிறுவனத்திடம் 2013, பெப்புருவரி 01 ஆந் திகதி பிற்பகல் 5.00 மணிக்கு முன்னர் நேரகாலத்தோடு கிடைக்கும் வகையில் கையளிக்கப்படுதல் வேண்டும் அல்லது அஞ்சல் மூலம் அனுப்புவதாயின் அவ்வாறு கிடைக்கும் வகையில் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

போல் ரத்நாயக அசோஸியேட்ஸ்,
சட்டத்தரணிகள், பிரசித்த நொத்தாரிசுகள்,
சட்ட ஆலோசகர்கள்.

12-310

---

## மேல் மாகாண கொழும்பில் நடைபெறுகின்ற (குடியியல் நீதிமன்ற அதிகாரத்தை அமுல்படுத்துகின்ற) மேல் நீதிமன்றம்

கொழும்பு 04, மெல்பன் அவெனியூ, 27 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பெல்வத்த ஷுகர் இன்டஸ்ட்ரிஸ் பீஎல்சீ கம்பனி ஒடுக்குவதற்கு உத்தேச கம்பனி தொடர்பான விடயத்தில் ;

வழக்கு இல. : HC/ CIVIL/ 47/2012/Co.

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின்கீழ் நீதிமன்றத்தால் ஒடுக்குவதற்கான கோரிக்கை பற்றிய விடயத்தில்;

எலயிட் கொமர்ஷல் பேர்ட்டிலயிசர்ஸ் (பிரைவட்) லிமிட்டெட், இல. 152, காலி வீதி, கொழும்பு 04.

............... மனுதாரர்

மேல்மாகாணம, கொழும்பில் நடைபெறுகின்ற குடியியல் அதிகாரத்தை அமுல்படுத்துகின்ற மேல் நீதிமன்றத்தால் மேற்குறித்த கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று கொழும்பு 04, காலி வீதி, 152 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள எலயிட் கொமர்ஷல் பேர்ட்டிலயிசர் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் அந்நீதிமன்றத்திற்கு 2012, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது. அந்த மனுவானது 2013, பெப்புருவரி 5 ஆந் திகதி நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்கு கட்டளையிடப்பட்டுள்ளது. அந்த மனுவின் மீதான கட்டளையொன்று ஆக்கப்பட்டது தொடர்பில் இணக்கம் அல்லது எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பினியின் எவரேனும் கடன் தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு நிமித்தத்திற்காக வழக்கு விசாரணை நடைபெறும்போது தானாக அல்லது தமது பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும். மனுவின் பிரதியொன்று

தேவைப்படுகின்ற எவரேனும் கடன் தருநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு அதற்காக விதிக்கப்படுகின்ற கட்டளையொன்றைச் செலுத்திய பின்னர் கீழே கையொப்பமிடுபவரால் வழங்கப்படும் :-

போல் ரத்நாயக அசோஸியேட்ஸ்,
சட்டத்தரணிகள் பிரசித்த நொத்தாரிசுகள்,
சட்ட ஆலோசகர்கள்,
இல. 59, கிரெகரிஸ் வீதி,
கொழும்பு 07.

**குறிப்பு**.- அந்த மனுவானது விசாரணை செய்யும்போது தோற்றுவதற்கு எண்ணுகின்ற ஆளொருவர் மேற்குறிப்பிட்ட போல் ரத்நாயக அசோஸியேட்ஸ் சட்டத்தரணிகள் கம்பனிக்கு தான் அவ்வாறு எண்ணுகின்றதென்பதை எழுத்திலான அறிவித்தலொன்றை கையளித்தல் அல்லது அஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அவ்வறிவித்தலில் அவரின் பெயர் மற்றும் முகவரியையும் அல்லது வியாபார நிறுவனமொன்றாயின் வியாபார நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியையும் குறிப்பிடுதல் வேண்டும். அவரால் அல்லது வியாபார நிறுவனத்தால் அல்லது அவரின் அல்லது அவர்களின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியால் (இருப்பின்) கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன் மேற்குறித்த நிறுவனத்திடம் 2013, பெப்புருவரி 01 ஆந் திகதி பிற்பகல் 5.00 மணிக்கு முன்னர் நேரகாலத்தோடு கிடைக்கும் வகையில் கையளிக்கப்படுதல் வேண்டும் அல்லது அஞ்சல் மூலம் அனுப்புவதாயின் அவ்வாறு கிடைக்கும் வகையில் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

போல் ரத்நாயக அசோஸியேட்ஸ்,
சட்டத்தரணிகள், பிரசித்த நொத்தாரிசுகள்,
சட்ட ஆலோசகர்கள்.

12-324